## சட்டத் திருத்தத்தில் அ.தி.மு.க.வின் நிலைப்பாடு என்ன?

# சி.ஏ.ஏ. சட்ட மசோதா - நாடாளுமன்றத்தில் நடந்தது என்ன?

## திருச்சி சிவா எம்.பி. விளக்க அறிக்கை!



**சென்னை, ஏப்.10**

**சி.ஏ.ஏ. – நாடாளுமன்றத்தில் நடந்தது என்ன? என்றும் சட்ட திருத்தத்தில் அ.தி.மு.க.வின் நிலைப்பாடு என்ன? என்றும் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சி.ஏ.ஏ., குடியுரிமை திருத்த சட்டம் என்பது பற்றி கடந்த சில நாட்களாக ஊடகங்களிலும், பொதுமேடைகளிலும் பரவலாகவும் பரபரப்பாகவும் பேசப்பட்டு வருவதற்கு முக்கிய காரணம் 2019 ல் நிறைவேற்றப்பட் இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான விதிமுறைகள்( RULES) அரசிதழில் இப்போது தேர்தலையொட்டி வெளியிடப்பட்டதே!

நிலவுகின்ற சில குழப்பங்களை தவிர்ப்பதற்காகவும் இது குறித்து மக்கள் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தினாலும் நாடாளுமன்றத்தில் இந்த சட்டம் நிறை வேற்றப்பட்டபோது நடந்தவைகளை விளக்க வேண்டியது அவசியமாகின்றது!

முதலில் குடியுரிமை என்றால் என்ன? ஒரு குறிப்பிட்ட நாட்டின் குடியுரிமை பெற்றவருக்கு அந்நாட்டில் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பொது என்று சொல்லக்கூடிய அனைத்து உரிமைகளும் கிடைக்கும். எழுத்துரிமை, பேச்சுரிமை, தேர்தலில் வாக்களிக்கின்ற , இராணுவத்தில் பணியாற்றுகின்ற உரிமைகளோடு சொத்துரிமையும் உண்டு. சுருக்கமாக சொன்னால் அரசியல் சட்டம் தரும் அனைத்து உரிமைகளும் , பாதுகாப்பும் வெளிநாடு செல்லும்போதும் கிடைக்கும். ஆதார் அட்டை, வெறும் இருப்பிட அடையாள அட்டை மட்டுமே ... அதுபோல பான் கார்டும் குடியுரிமைக்கான சான்று இல்லை என நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கின்றன. குடியுரிமை இல்லாதோருடைய நிலை எத்தனை துயரம் நிறைந்தது என்பது விவரிக்க இயலாத ஒன்று. உரிமைகள் இல்லாத வாழ்க்கை என்பது கை, கால்கள் இருந்தும் செயலற்ற நிலையில் இருப்பது போன்றதே! இவர்கள் வெளிநாட்டுக்கு செல்ல நேர்ந்தால் ஒரு குற்றவாளியை விட இரக்கமற்ற முறையிலேயே நடத்தப்படுவார்கள்.

**குடியுரிமை இல்லாத 60 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள்!**

இப்படி குடியுரிமை இல்லாத 60,000 இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் திருச்சி, கன்னியாகுமரி, திருவண்ணாமலை போன்ற ஊர்களில் முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கழக ஆட்சி ஆறாவது முறையாக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மலர்ந்ததற்குப் பின் இவர்களுக்குப் பல சலுகைகளும் பாதுகாப்பும் தரப்பட்டிருப்பதோடு குடியுரிமை பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன .

நம்முடைய நாடு 1950-ல் குடியரசாக ஆனதற்குப் பின்னால் 1955 ல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குடியரிமை சட்டம் அதற்குப் பின் 1986, 1992, 2003, 2005, 2015, 2019 என ஆறுமுறை திருத்தப்பட்டிருக்கின்றது.

இப்போது நாம் அவசியத்தின் பொருட்டு பேச வேண்டியது 2019 சட்டத் திருத்தத்தைப் பற்றி மட்டுமே! இந்த திருத்தத்தின் நோக்கம்- நமக்கு அண்டை நாடுகளாக இருக்கின்ற பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆஃப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து மத ரீதியாக துன்புறுத்தப்பட்டு ( RELIGIOUSLY PERSECUTED ) 2014-க்கு முன் வரை வந்து குடியேறிய இந்துக்கள், கிறித்துவர்கள், சீக்கியர்கள், பார்சிக்கள், புத்த மற்றும் ஜைன என ஆறு மதங்களை சார்ந்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவது என்பதே!

**பா.ஜ.க.வின் உள்நோக்கம்!**

மேலோட்டமாக பார்க்கிறபோது இது மனிதாபிமான மிக்க ஒரு நடவடிக்கையாக தெரிந்தாலும் இதில் இஸ்லாமியர்கள் என்ற ஒரு முக்கியமான பிரிவினர் விடுபட்டிருப்பது தெரியும். பாரதிய ஜனதாவினுடைய உள்நோக்கம் வெளிப்படையாக இந்த சட்ட திருத்தத்தின் மூலம் வெளிச்சத்திற்கு வந்தது: மத சார்பற்ற நாடாகிய இந்தியாவில் தாங்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுவதாக நாடு முழுவதும் முஸ்லீம்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். டெல்லி ஜும்மா மஸ்ஜித் பகுதியில் வரலாறு காணாத அளவில் இஸ்லாமிய பெண்மணிகள் பல்லாயிரக்கணக்கில் இந்த போராட்டத்தில் வீட்டிற்கு கூட செல்லாமல் இரவு பகலாக ஈடுபட்டது பெரும் பரபரப்பை உருவாக்கியது! (கொரோனா பெருந்தொற்று தீவிரமான காரணத்தினாலேயே அந்தப் போராட்டங்கள் முடிவுக்கு வந்தது தீர்வு எதுவும் எட்டாமலே)

மக்களவையில் பெரும்பான்மை பலம் பெற்றிருக்கும் ஆளுங்கட்சி எளிதாக அந்த மசோதாவை அங்கு நிறைவேற்றியதற்குப் பின்னால் 11-12-2019 மாநிலங்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. அனைத்து எதிர்க் கட்சிகளும் இந்த சட்ட திருத்தம் முஸ்லீம்களை புறக்கணிப்பதை சுட்டிக்காட்டி கடுமையாக எதிர்த்து உரையாற்றினார்கள். கழகத்தின் சார்பில் இந்த விவாதத்தில் நான் கலந்து கொண்டு பேசினேன்.

“1947 ல் நாடு விடுதலை அடைந்த போது இந்தியா, பாகிஸ்தான் என பிரிவினை ஏற்பட்ட நேரத்தில் முகமது அலி ஜின்னா நான் இஸ்லாமியர்களுக்கென நாடொன்று கண்டிருக்கிறேன் , முஸ்லீம்கள் என்னோடு வாருங்கள் என்று அழைப்பு விடுத்த நேரத்தில் இங்கிருந்த முஸ்லீம்கள் - நாங்கள் இஸ்லாமியர்கள்தான். ஆனால் இந்தியாதான் எங்கள் நாடு என்று இங்கேயே தங்கி நம்மோடு சகோதரர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே! அவர்களுக்கு நாம் செய்யும்

கைமாறு இதுதானா?” என்று நான் உணர்ச்சி பொங்க கேட்டதற்கு பாராமுகமும், கேளா காதும், கேலி சிரிப்பும்தான் ஆளும் தரப்பிலிருந்து கிடைத்தது. எதிர் கட்சிகளின் வாதத்தில் உள்ள நியாயத்தை உணர்ந்து ஏற்கிற கட்சியல்லவே பாஜக! என்றால் இப்படி ஒரு பாரபட்சமான அணுகுமுறையை மேற்கொண்டிருக்க மாட்டார்களே!

**மசோதாவில் திருத்தங்கள்!**

மசோதாவை தோற்கடிக்க முயன்றால் இந்த சட்ட திருத்தத்தின் மூலம் பயன் பெறக் கூடிய ஆறு மதத்தை சார்ந்தவர்களின் எதிர்ப்பைப் பெற வேண்டியதிருக்கும். நமக்கு தேவை இஸ்லாமியர்களுக்கும் இந்த சலுகை கிட்டிட வேண்டுமென்பதே ! அத்தோடு தமிழ்நாட்டை சார்ந்த நாம் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலங்கை தமிழர்களுக்கும் குடியுரிமை பெறுவதற்கான நல்லதோர் வாய்ப்பு! ஆக தீர்வுக்கு எங்களுக்கு இருந்த வழி மசோதாவில் திருத்தங்கள் கொண்டு வருவதுதான்!

இதில் ஒரு பிரச்சினை என்னவென்றால் இலங்கைத் தமிழர்கள் மதரீதியாக துன்புறுத்தப் பட்டு இந்தியாவிற்கு வரவில்லை என்ற வாதம் எடுத்து வைக்கப்படும். இதை மனதில் கொண்டு மிகுந்த சிரத்தை மேற்கொண்டு , ஆழ்ந்த கவனத்தோடு திமுகவின் உறுப்பினர் என்ற வகையில் நான் மூன்று திருத்தங்களை முன் வைத்தேன். 1) “மதரீதீயாக “ துன்புறுத்தப்பட்டு என்பதோடு “ இனரீதியாக” என்று சேர்க்கவும். “ 2) பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆஃப்கானிஸ்தான் என்பதோடு “ இலங்கையை” சேர்க்கவும் 3) ஆறு மதங்களோடு முஸ்லீம்களை சேர்க்கவும்.

இந்த திருத்தங்கள் குரல் வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டதாக அவைத் தலைவர் திரு வெங்கையா நாயுடு அறிவித்ததும் நான் மின்னணு வாக்குப் பதிவு கேட்டேன் . இந்த கோரிக்கையை ஏற்று மின்னணு வாக்குப் பதிவு நடத்த அவைத் தலைவர் உத்தரவிட்டார். அன்றைக்கு மாநிலங்களவையில் கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்துதான் . 1) நான் (திருச்சி சிவா), 2) ஆலந்தூர் பாரதி, 3) டி.கே. எஸ். இளங்கோவன், 4) மு.சண்முகம், 5) பி.வில்சன் ஆச்சரியப்படத்தக்க அளவில் நம்முடைய திருத்தத்துக்கு ஆதரவாக 99 வாக்குகள் கிடைத்தன. அரசாங்கத்துக்கு ஆதரவாக, இந்த திருத்தங்களை எதிர்த்து 124 வாக்குகள் பதிவாயின!

**பா.ஜ.க.வுக்கு ஆதரவாக அ.தி.மு.க.!**


வித்தியாசம் 25. அன்றைய தினம் மாநிலங்களவையில் அ.தி.மு.க. உறுப்பினர்களின் எண்ணிக்கை 13! அது அப்படியே பா.ஜ.க. அரசாங்கத்துக்கு ஆதரவாக விழுந்தது. அந்த 13ஐ 124 ல் கழித்தால் அரசுக்கு ஆதரவு 111. அந்த வாக்குகள் திருத்தத்திற்கு ஆதரவாக அளித்திருந்தால் 112 பெற்று மிக எளிதாக நாட்டில் பெரிய போராட்டங்கள், கொந்தளிப்புகள் இல்லாமல் முஸ்லீம்களும் , 60,000 இலங்கைத் தமிழர்களும் குடியுரிமை பெற்றிருப்பார்கள். மசோதாவும் நிறைவேறியிருக்கும். நம்முடைய நீண்ட கால கோரிக்கையான இலங்கை தமிழர்கள் குடியுரிமை பிரச்னையும் தீர்ந்திருக்கும்.

இன்றைக்கு இந்திய நாடு தங்களை அங்கீகரிக்கவில்லையே என குமுறி கொந்தளித்து வேதனையில் வெந்து கொண்டிருக்கும் இஸ்லாமியர்களும் ஆறுதலடைந்து நிம்மதி பெருமூச்சு விட்டு கொண்டிருந்திருப்பார்கள்! மதவாத பாஜகவின் பாரபட்சமான செயலுக்கு துணை நின்று கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பினை கெடுத்து இலங்கைத் தமிழர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் மிகப் பெரிய பாதகத்தை செய்த அதிமுக வின் துரோகம் எந்த காலத்திலும் மன்னிக்க முடியாதது!

**மக்கள் விரோத சட்டங்களுக்கு ஆதரவளித்த எடப்பாடி பழனிசாமி!**

நாடாளுமன்ற தேர்தல் நேரத்தில் கூட்டணியை விட்டு வெளியேறி வந்து சத்தியவான் வேடம் போடும் அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் என்று கூறிக் கொள்ளும் எடப்பாடி பழனிசாமிதான் பா.ஜ.க. ஆட்சி கொண்டு வந்த மக்கள் விரோத, மாநில உரிமைகளைப் பறிக்கின்ற எல்லா சட்டங்களுக்கும் நேற்று வரை ஆதரவு தந்து தமிழ்நாட்டுக்கும் சிறுபான்மையினருக்கும் எந்த காலத்திலும் மன்னிக்க முடியாத பாதகம் செய்தவர்!

**ஆதாரம் !**



359

Uncorrected/ Not for Publication 11.12.2019

GSP-DS/8.35/5L

MR. CHAIRMAN: Are you moving the Amendment (No. 7), Shri Tiruchi Siva?

SHRI TIRUCHI SIVA (TAMIL NADU): Yes, Sir. Sir, I move:

(No.7) That at page 3, for line 4, the following be substituted, namely:- "Christian community, Muslim and Ethnic minority communities in Afghanistan, Bangladesh, Pakistan and Sri Lanka, the aggregate period of"

MR. CHAIRMAN: I put the Amendment (No.7) moved by Shri Tiruchi Siva to vote.

SHRI TIRUCHI SIVA: Sir, I want division.

MR. CHAIRMAN: Okay, division.

The House divided.

(MR. DEPUTY CHAIRMAN in the Chair)

(MR. CHAIRMAN in the Chair)

MR. CHAIRMAN: Subject to correction:

Ayes: 99

Noes: 124

(Here enter the Division Lists for Ayes and Noes arranged in alphabetical order)

**பா.ஜ.க. ஆதரவு வாக்குகள் – 124**
**இதில் அ.தி.மு.க. – 13**
**அ.தி.மு.க. வாக்களிக்கவில்லையெனில் 111**
**அரசுக்கு ஆதரவு**
**நான் கொண்டு வந்த சட்ட திருத்தத்திற்கு எதிர்க்கட்சிகள் 99 வாக்குகள்**
**அ.தி.மு.க. ஆதரவு தந்து வாக்களித்திருந்தால் 13**
**மொத்தம் – 113**

ஒரு வாக்கு வித்தியாசத்தில் குடியுரிமை சட்டத்தில் இஸ்லாமியர்களுக்கும் 60,000 இலங்கைத் தமிழர்களுக்கும் குடியுரிமையும் வாழ்வும் கிடைத்திருக்கும் பல போராட்டங்கள் தவிர்க்கப்பட்டு இருக்கும். குழப்பங்கள் இன்றும், இந்நாட்டு இஸ்லாமியர்களுக்கும் இலங்கைத் தமிழர் 60,000 பேருக்கும் இல்லாமல் போயிருக்கும்.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. அறிக்கையில் கூறியுள்ளார்.




பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் எஸ்.டி.ஜெயலெட்சுமியை ஆதரித்து, கே.என்.அருண்நேரு.எம்.பி., அரும்பாவூர் பேரூர் கழகம் சார்பில் தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்து, பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார்.இதில் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் செ.நல்லதம்பி, பேரூர் கழக செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பேரூராட்சி தலைவர் வள்ளியம்மை ரவிச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026

### தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களின்



# தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | நேரம் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 10.4.2026 | மாலை 4.00 மணி | விருதுநகர் வடக்கு | திருச்சுழி |
| ” | மாலை 5.00 மணி | விருதுநகர் தெற்கு | அருப்புக்கோட்டை |
| ” | மாலை 6.00 மணி | விருதுநகர் வடக்கு | விருதுநகர் |
| ” | மாலை 7.00 மணி | விருதுநகர் வடக்கு | சிவகாசி |
| 11.04.2026 | காலை 11.00 மணி | தென்காசி வடக்கு | வாசுதேவநல்லூர் |
| ” | மாலை 6.00 மணி | தென்காசி தெற்கு | கடையநல்லூர் |
| ” | மாலை 7.00 மணி | ” | தென்காசி |
| ” | மாலை 8.00 மணி | திருநெல்வேலி மேற்கு | ஆலங்குளம் |
| 13.04.2026 | காலை 11.00 மணி | திருநெல்வேலி மத்திய | திருநெல்வேலி |
| ” | மாலை 4.00 மணி | திருநெல்வேலி கிழக்கு | நாங்குநேரி |
| ” | மாலை 5.00 மணி | ” | இராதாபுரம் |
| ” | மாலை 6.30 மணி | கன்னியாகுமரி கிழக்கு | கன்னியாகுமரி |
| ” | மாலை 7.30 மணி | ” | குளச்சல் |
| ” | மாலை 8.30 மணி | கன்னியாகுமரி மேற்கு | கிள்ளியூர் |
| 14.04.2026 | காலை முதல் மாலை வரை | தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் | |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள் : 08.04.2026.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி மறுப்பு:

# ஒன்றிய அரசின் இரட்டை நிலைப்பாட்டால் தமிழ்நாட்டுக்கு துரோகம்!

## மகாராஷ்டிர முதலமைச்சருக்கு – கழக எம்.பி.க்கள் தமிழச்சி தங்கபாண்டியன் – கலாநிதி வீராசாமி பதில்!





**சென்னை, ஏப். 10 -**

**மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி மறுத்துள்ளது அதன் இரட்டை நிலைப்பாட்டையே காட்டுகிறது. அதன் மூலம் தமிழ்நாட்டுக்கு துரோகம் இழைக்கப்பட்டுள்ளது. ஆனால் மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் அதை மறைத்து விட்டு பிளாக்மெயில் செய்வது போல் பேசுகிறார் என்று கழக எம்.பி.க்கள் தமிழச்சி தங்க பாண்டியன், கலாநிதி வீராசாமி பேட்டியளித்துள்ளனர்.**

தி.மு.க. எம்.பி.க்கள் தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி ஆகியோர் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் அளித்த பேட்டி வருமாறு :

மகாராஷ்டிர மாநில முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் பா.ஜ. வேட்பாளர் வெற்றி பெற்றவுடன் மெட்ரோ திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று சொல்லியிருக்கிறார். இந்த விவகாரத்தில் தனது மிக கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்திருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இங்கு ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமும், முதல்வரும் இருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்ற முதல் நாளிலிருந்து இத்திட்டம் குறித்து என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பது குறித்த தேதி வாரியான விவரங்கள் எங்களிடம் உள்ளன.

மே 7, 2021 அன்று பதவி ஏற்ற உடனேயே, மதுரை மெட்ரோ திட்டத்தை மீண்டும் உடனடியாக தொடங்குவதாக அறிவித்து, அதற்கான வழிகாட்டுதல்களை அவர் வெளியிட்டார்.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கு தேவையான அனைத்துத் தொழில்நுட்ப, நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. 11,368 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இத்திட்டத்தின் மாநில அளவிலான அனைத்துப் பூர்வாங்க பணிகளும் 100 சதவீதம் நிறைவடைந்துள்ளன. குறிப்பாக, செப்டம்பர் 6, 2025 அன்று சி.எம்.ஆர்.எல் மற்றும் நெடுஞ்சாலைத்துறை இணைந்து திருமங்கலம் பகுதியில் ஆய்வு மேற்கொண்டு, சுரங்கப்பாதை சீரமைப்பு பிரச்னைகளுக்கும் தீர்வு கண்டுள்ளனர். திராவிட மாடல் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன் இவை அனைத்தும் முறையாக திட்டமிடப்பட்டு, பணிகள் அனைத்தும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இவ்வளவு ஆக்கப்பூர்வமான வேலைகள் நடந்திருக்கும் நிலையில், இவற்றை எல்லாம் புறந்தள்ளிவிட்டு, எங்களுடைய உறுப்பினரை தேர்ந்தெடுத்தால் தான் இதை செய்வோம் என்று கூறுவது அப்பட்டமான பிளாக்மெயில் அரசியல். முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதல்வர் இத்தனை பணிகளைச் செய்திருக்கும்போது, எதன் அடிப்படையில் நீங்கள் அதனை உதாசீனப்படுத்துகிறார்?

நவம்பர் 18, 2025 அன்று, 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 20 லட்சத்தை எட்டவில்லை எனக் கூறி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மெட்ரோ திட்ட அறிக்கைகளை மத்திய அரசு திருப்பி அனுப்பியுள்ளது.

ஆனால், ஆக்ரா, பாட்னா, போபால் போன்ற வட இந்திய நகரங்களில் மக்கள் தொகை குறைவாக இருந்தபோதே, மெட்ரோ திட்டங்களுக்கு அனுமதி கொடுத்து கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மதுரை என்று வரும்போது மட்டும் 15.6 லட்சம் மக்கள் தொகையை காரணம் காட்டி நிராகரிப்பது ஒன்றிய அரசின் இரட்டை நிலைப்பாட்டையே காட்டுகிறது. இது தமிழ்நாட்டு மக்களுக்கும் தமிழர்களுக்கும் இழைக்கப்படும் பெரும் துரோகமாகும்.

மகாராஷ்டிரா முதல்வர் இங்கு வந்து இத்தகைய வாக்குறுதிகளை அளிப்பதன் பின்னால் உள்ள அரசியல் பின்புலத்தை நாம் உணர வேண்டும். இதையேதான் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இது என்.டி.ஏ vs மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி என்பதைக் காட்டிலும், டெல்லி vs தமிழ்நாடு இடையிலான தேர்தல் என்று சுட்டிக்காட்டுகிறார். தேவேந்திர பட்னாவிஸின் இன்றைய பேச்சே அதற்கு சிறந்த உதாரணமாகும்.

தேவேந்திர பட்னாவிஸ் துணை முதல்வராக இருந்த போது, அங்கிருந்த பல லட்சம் கோடி மதிப்பிலான திட்டங்கள் குறிப்பாக பாக்ஸ்கான், டாடா ஏர் பஸ், மெடிக்கல் பார்க் போன்றவை குஜராத்திற்கு மாற்றப்பட்டன. சொந்த மாநில உரிமைகளை அடகு வைத்தவர்தான் இன்று தமிழ்நாட்டிற்கு வந்து வாக்குறுதி அளிக்கிறார்.

இவ்வாறு அவர்கள் பேட்டியளித்தனர்.



கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள், வீராங்கனைகள் கூட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் ஆ.சுதாகர் அறிமுகக் கூட்டம் கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இதில் சூலூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி உள்பட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.